**செய்தி வெளியீடு எண்: 110** **நாள் : 19.02.2016**

# <u>செய்தி வெளியீடு</u>

<u>பொதுத் (தேர்தல்கள்–1) துறை</u>

15–02–2016 முதல் 29–02–2016 வரை வாக்காளர் பட்டியல்களை செம்மைப்படுத்தும் பணியை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இப்பணியின்போது, இறந்த வாக்காளர்கள், பலமுறைப்பதிவு வாக்காளர்கள் மற்றும் ஒரே அடையாள அட்டை எண்ணைக் கொண்ட வாக்காளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வாக்குச் சாவடி நிலை அலுவலர்களின்மூலம் சரிபார்த்தல் நடைபெற்று வருகின்றது.

2. இப்பணிக்கான அட்டவணையின்படி, இன்று (19–02–2016) நடைபெறும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி நிலை முகவர்களின் சந்திப்புக் கூட்டத்தில் நீக்கப்படவுள்ளோர் பட்டியலை அளிக்க திட்டமிடப்பட்டிருந்தது. வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள்மூலம் சரிபார்க்கும் பணி சில மாவட்டங்களில் இன்னும் முடிவடையவில்லை. எனவே, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச் சாவடி நிலை முகவர்களின் மற்றுமொரு சந்திப்புக் கூட்டம் 24–02–2016 அன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**